Journal of Valartamil, eISSN 2821-3157,
Volume 2, No.1, 2021, (117 - 129)

# குறள் வாசிப்பு வழி சிந்தனைத் திறன் மேம்பாடு

## Improving Thinking Skills Through Kural Reading

**Munimah Sudramanian**
Exellent Lecturer
Department of Language, Technical Educational Campus, Ministry of Education Malaysia
munimahsudra@gmail.com

**Chander Vengadasalam**
Exellent Lecturer
Department of Social Science, Thecnical Educational Campus, Ministry of Education Malaysia
chandervengadasalam@gmail.com

**Published:** 30 June 2021

**To cite this article (APA):** Sudramanian, M., & Vengadasalam, C. (2021). குறள் வாசிப்பு வழி சிந்தனைத் திறன் மேம்பாடு. *Journal of Valartamil*, *2*(1), 117-129. https://doi.org/10.37134/jvt.vol2.1.9.2021

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol2.1.9.2021

**ஆய்வுச்சாரம்**: கல்வியின் முக்கிய நோக்கம் மாந்தனின் சிந்தனை ஆற்றலை வளப்படுத்துவதாகும். மாந்தனின் சிந்தனையை வளப்படுத்துவதில் மொழி முக்கியப் பங்காற்றுகிறது. மொழி மாந்தனின் தொடர்பு ஊடகமாக விளங்கி அவனுடைய எண்ணங்களையும் சிந்தனைகளையும் வெளியிடுவதற்கு உதவுகிறது. சிந்தனை என்பது மூளை செயற்பாங்கின் விளைவாகும். "சிந்தனைக்கு முக்கியக் கருவியாக விளங்குவது மொழி" என்ற கருத்தைப் பியாஜே, புரூனர், வைகாட்ஸ்கி முதலிய உளவியலாளர்களும் அறிவுறுத்தியுள்ளனர். எனவே, சிந்தனையிலிருந்து மொழியைப் பிரித்தறிய முடியாது. அவ்வடிப்படையில் தம் சிந்தனையின் வெளிப்பாட்டினைக் குறள் வெண்பா வடிவில் திருக்குறளை அமைத்தவர் வள்ளுவர். வள்ளுவர் 1330 குறள்களை 133 அதிகாரங்களின் கீழ் தொகுத்து, அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பால்களின் அடிப்படையில் படைத்துள்ளார். வள்ளுவரின் குறள்களை அதிகார அடிப்படையில் ஆய்வுச் சிந்தனையோடு வாசித்துச் சிந்தனைத் திறனை எவ்வாறு வளர்க்கலாம் என்று எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**கருச்சொற்கள்**: ஆய்வுச்சிந்தனை, குறள் வாசிப்பு, சிந்தனைத் திறன், மொழி.

**Abstract**: The main purpose of education is to enrich the thinking power of human. Language plays an important role in enriching one's thinking. Language serves as a medium of human communication and helps to express his thoughts and ideas. Thought is the result of brain activity. Psychologists such as Piaget, Bruner, and Vygotsky have stated that

'language serves as an important tool for thinking.' Therefore, language cannot be distinguished from thought. So thus, Valluvar has formed the Kural Venpa that nurtures the expression of his thought. Valluvar has compiled 1330 kural under 133 chapters and created them on the basis of three components namely aram, porul and inbam. Purpose of the this study is to explore the kural produced by Valluvar in terms of chapters and read it with critical thinking on how to develop thinking skill.

**Keywords:** Critical thinking, Kural reading, Language, Thinking skill.

## முன்னுரை

மாந்தனின் சிந்தனையைச் செம்மைப்படுத்திக் கூர்மைபடுத்துவதே கல்வியின் குறியிலக்கு. கல்வியின் மையமாகத் திகழ்பவன் மாணவன். அம்மாணவன் கற்றலின் வழியே கல்வியைப் பெறுகின்றான். அக்கற்றலானது அம்மாணவனை எதனையும் காலத்திற்கேற்றவாறு சிந்தித்து அலசி ஆராயும் ஆய்நிலைச் சிந்தனையைக் கொண்டவனாகவும் கற்பனைத் திறமும் புத்தாக்க ஆற்றலும் மிக்க ஆக்கச் சிந்தனையைக் கொண்டவனாகவும் திகழச் செய்ய வேண்டும் (Aziz, 2021). அப்போதுதான் இவ்வுலகின் போட்டிமிக்க தன்மைக்கு ஏற்றவாறு தன்னை அம்மாணவன் தயார் செய்து கொள்ள முடியும். எனவே, கற்றலும் கற்பித்தலும் உயர்நிலைச் சிந்தனை கொண்ட மாணவனை உருவாக்க வேண்டும்.

கல்வி என்பது கற்றதை மனனம் செய்து ஒப்புவிக்கும் கலை அன்று. அவ்வாறான கல்வியானது கிளிப்பிள்ளைப் பாடமாக அமைந்துவிடும். எனவே, ஆசிரியர் அதிகமான நினைவாற்றலை மதிப்பிடும் கேள்விகளைக் கேட்பதைத் தவிர்க்க வேண்டும். மாறாக, ஆசிரியர் என்பவர், மாணவன் அறிந்தவற்றைப் பல்வேறு சூழலில் பயன்படுத்தி வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு சிக்கல்களைக் களையவும் வாழ்க்கையில் ஆக்ககரமான முடிவுகளை எடுத்து முன்னேற்ற பாதையில் செல்லவும் அவனுக்குத் துணையாக இருக்க வேண்டும். அதற்கு முதலில் அம்மாணவனுக்குச் சிந்திக்கக் கற்பிக்க வேண்டும் (Che Zanariah &Fadzilah, 2011).

சிந்திக்கக் கற்பித்தல் என்பது கற்பவரைச் சிந்திக்கத் தூண்டுவதாகும். வினாக்கள், கலந்துரையாடல், படங்கள், பனுவல்கள் ஆகியவற்றின் வழி மாணவனைச் சிந்திக்கத் தூண்டலாம். இவற்றுள் வினாக்களின் வழியே மாணவர்களை அதிகமாகச் சிந்திக்க வைக்க முடியும்.

## முந்தைய ஆய்வுகள்

மலேசியப் பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கும் ஏற்றம் தரும் திறன்களுள் சிந்தனைத் திறன் முதலிடம் வகிக்கின்றது. இச்சிந்தனைத் திறனானது ஒரு மனிதன் தன் அறிவாற்றலைக் கொண்டு சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவுக்கு வரும் செயல்பாட்டிற்கு வித்திடுகின்றது *(Kementerian Pendidikan Malysia, 2014).* கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்களைக் கற்பிக்கும் முறைமை வழியாகவும் பல்வகை வினாக்களைத் தொடுக்கும் முறைமை வழியாகவும் சிந்தனைத் திறன்கள் வளர்க்கப்படுகின்றன *(Pusat Perkembangan Kurikulum 2003).* கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு சிந்தனைத் திறனுக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் ஆசிரியர்கள் இன்னமும் தேர்வு அடிப்படையிலேயே கற்றல் கற்பித்தலை நடத்துகின்றனர் *(Hadi, 2012).* ஆசிரியர்கள் சிந்தனைத் திறனைப் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றிருந்தாலும் அதனைச் செயலாக்கத்திற்குக் கொண்டு வருவதில் சிக்கலை எதிர் நோக்குகின்றனர் *(Upik & Ragu, 2015).*

சிந்தனைத் திறனை மேம்படுத்துவதில் இலக்கியம் பெரும் பங்காற்றுகிறது எனவும் அதுவும் கவிதைகள் அல்லது செய்யுள்கள் கற்றல் வழி இச்சிந்தனைத் திறனானது அதிகம் வளர்க்கப்படுகிறது என்றும் கூறப்படுகின்றது *(Line Brandt, 2005).* இந்தச் சிந்தனைத் திறனானது வாழ்வில் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண உந்துதலாக அமைகின்றது (*Montag-Smit & Maertz, 2017).* அதன் அடிப்படையில் செய்யுள் வடிவில் இருக்கும் திருக்குறளானது தன்னகத்தே பல சிந்தனைத் திறன்மிக்க கூறுகளைக் கொண்டுள்ளதாகவும், அவை யாவும் வெளிக் கொணர வேண்டிய அவசியம் உள்ளதாகவும் செல்வஜோதி (2009) குறிப்பிடுகின்றார். ஆகவே, ஆய்வாளர், திருக்குறள் வழி எவ்வாறு சிந்தனைத் திறனை மேம்படுத்தலாம் என்பதை ஆராய்ந்துள்ளார்.

## ஆய்வுச் சிக்கல்

பொதுவாக, திருக்குறளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் குறள் மனனத்திற்கும் அதன் பொருள் மனனத்திற்குமே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இதற்கு முக்கியக் காரணம் மதிப்பீட்டு முறையே. திருக்குறளைக் கொடுத்து அதன் விளக்கத்தை எழுத பணித்தலும் விளக்கத்தைக் கொடுத்து அதற்கேற்ற குறளை எழுத பணித்தலுமே அதிகம் காணப்படுகின்றது. சில வேளைகளில் சூழலைக் கொடுத்துக் குறளை எழுத பணித்தலும் இடம் பெறுகின்றது. இதனால்

மாணவர்கள், வரையறுக்கப்பட்ட குறள்களைத் தேர்வு நோக்கத்திற்காகக் கற்கின்றனர். இவ்வாறான கற்றல் கற்பித்தலானது எவ்வகையிலும் மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனையைத் தூண்டாது. திருக்குறளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களின் சிந்தனை ஆற்றலை வளர்க்க முடியும். திருக்குறளை ஒரு கருவியாகப் பயன்படுத்தி மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனையைத் தூண்ட முடியும் *(Annathurai, 2016)*. சோம்ஸ்கி *(Chomsky, 1972)* எனும் மொழியியலாளர் சிந்தனை, மொழி ஆகிய இரண்டிற்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதை வலியுறுத்தியுள்ளார். மொழி என்பது சிந்தனையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பது சோம்ஸ்கியின் கருத்தாகும். *Zoya G. Khanova (2021)* எனும் உளவியலாளர், சிந்தனை என்பது மொழியப்படாத மொழியியல் வடிவமாகும் என்கின்றார். ஆகவே, மொழி கற்றலின் முக்கியக் கூறான இலக்கியம் கற்பித்தலின் வழி மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனையைத் தூண்ட முடியும். இதற்குத் திருவள்ளுவரின் திருக்குறள் நிச்சயம் பேருதவியாக இருக்கும் என்பது திண்ணம்.

## ஆய்வின் நோக்கம்

திருக்குறளை அதிகார அடிப்படையில் ஆய்வுச் சிந்தனையோடு வாசித்துச் சிந்தனைத் திறனை எவ்வாறு வளர்க்கலாம் என்று எடுத்துரைப்பதுடன் இவ்வாய்வின் வழி ஆக்கப்பூர்வமான வினாக்களின் வாயிலாக உயர்நிலைச் சிந்தனையைத் தூண்டி ஒவ்வோர் அதிகாரங்களின் முழு கருத்தைப் புரிந்து கொள்ளச் செய்ய வழிகாட்டுவதும் இவ்வாய்வின் முக்கிய நோக்கங்களாகும்.

## ஆய்வின் முக்கியத்துவம்

தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் இலக்கியம் மாணவர்களின் சிந்தனையாற்றலை வளர்ப்பதற்கு ஏதுவான களத்தை வழங்குகிறது *(Rajendran, 2008)*. ஆகவே மாணவர்களின் சிந்தனையாற்றலை வளர்ப்பதற்கு ஆசிரியர் முறையான நடவடிக்கைகளைத் திட்டமிடுவது மிக அவசியம். சிந்திக்கச் செய்வது கல்வியில் இயல்பாய், இணைந்து வருவது. எந்தவொரு முற்போக்கான திட்டமும், ஏற்பாடும் மாணவர்களைச் சிந்திக்கத் தூண்ட வேண்டும்; அவர்களின் சிந்தனை ஆற்றலை வளர்க்கும் வழிவகைகளையும் உள்ளடக்கியிருக்க

வேண்டும், என்று ஜோன் திவி (1998) வலியுறுத்தியுள்ளார். சிந்திக்க கற்பித்தலின்போதும் சிந்தனையைக் கற்பித்தலின் போதும் ஆசிரியர்கள் பொதுவாக வினாக்களையே முதன்மை உத்தியாகப் பயன்படுத்துகின்றனர் *(Narayanasamy, 2012)*. மாணவர்கள் கற்கும் எந்தப் பாடப்பொருளும் அவர்களைச் சிந்திக்கத் தூண்ட வேண்டும். அவ்வகையில் திருவள்ளுவரின் உயர்நிலைச் சிந்தனைப் படைப்பான திருக்குறளின் வழி மாணவர்களின் சிந்தனைத் திறனை வளர்க்க முடியும்.

## ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டது. திருவள்ளுவர் எழுதியுள்ள திருக்குறளை அதிகாரங்கள் அடிப்படையில் தேர்ந்தெடுத்து அவற்றைப் ப்ளூம்ஸ் (1983) சிந்தனைத் திறன் படிநிலைகள் வழி வினாக்கள் தொடுத்து, மாணவர்களின் சிந்தனைத் திறனை மேம்பாடு செய்யும் வழிமுறையை விளக்கும் விளக்கக் கட்டுரையாக இந்த ஆய்வு அமைந்துள்ளது.

## அறிவுசார்களமும் சிந்தனைப் படிநிலைகளும்

மாந்தனின் மூளைச் செயற்பாடு மூன்று பெரும் களங்களில் நடைபெறுகின்றது. இங்குக் களம் எனக் குறிப்பிடுவது மூளை செயல்படும் துறைகள் அல்லது எல்லை வரம்புகள் எனக் கொள்ளலாம். அவை,அறிவுசார்களம்*(Cognitive Domain),* உளசார்களம்*(Affective Domain),* உடல் இயக்கஞ்சார்களம்*(Psycho-motor Domain)* என்பனவாகும். இங்கு நாம் கருத்துரைக்க எடுத்துக் கொள்வது அறிவுசார்களமாகும்.

மாந்தனின் சிந்தனைச் செயற்பாங்கு எப்பொழுதும் ஒரே வகையில் அமைவதில்லை. சிந்திக்கத் தூண்டும் சூழமைவின் எளிமை அல்லது கடினத் தன்மைக்கு ஏற்பச் சிந்தனைச் செயற்பாங்கு அமைகின்றது. ஒருவர் புதிய ஒன்றைப் பற்றி அறிந்து அதனை மனத்தில் பதிய வைத்தல், தேவை ஏற்படும்போது அதனை நினைவுகூர்தல், பெறும் தகவலைப் புரிந்து கொள்ளல், இவற்றின் அடிப்படையில் பெற்றுள்ள அறிவினைப் புதிய சூழ்நிலையில் பயன்படுத்துதல் ஆகியவை தாழ்நிலைச் சிந்தனையாகும். ஒன்றைப் பற்றி பகுத்தாய்ந்து கருத்தறியவோ, பகுத்தாய்ந்து அறிந்த கருத்துகளைக் கொண்டு ஒன்றைப் பற்றித் தொகுத்துக் கருத்துரைக்கவோ சரியான முடிவெடுக்கவோ கிடைக்கும் தகவலின் நம்பகம், தரம், நடுநிலைமை முதலியவற்றை

மதிப்பிடவோ முற்படும் சூழமைவில் கடினமான சிந்தனைச் செயற்பாங்கு நடைபெறுகின்றது. இ·து உயர்நிலைச் சிந்தனையாகும் *(Supramani, 1994)*. அறிவுசார்களத்தின் இவ்விரு வகையான சிந்தனைச் செயற்பாங்கினையும் பெஞ்சமின் புளூம் (1983) ஆறு படிநிலைகளாகப் பகுத்து படம் 1 வழி விளக்கியுள்ளார்.

**படம்** 1 :புளூம் (1983) சிந்தனைப் படிநிலைகள்



## புளூம் அறிவுசார்களமும் ஓனேஸ்கோ & நியுமென் சிந்தனைப் பகுப்பும்

ஓனெஸ்கோ, நியுமென்(1994) ஆகிய இருவரும் புளூமின் (1983) அறிதல், தெரிதல் ஆகிய இரு சிந்தனைப் படிநிலைகளையும் தாழ்நிலைச் சிந்தனை எனவும் ஆளல், பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடலாகிய நான்கினையும் மேல்நிலைச் சிந்தனை எனவும் பகுத்துள்ளனர். புளூமின் அறிவுசார் களத்தின் சிந்தனைப் படிநிலைகளோடு தொடர்புடைய செயற்பாங்கு வினைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை அட்டவணை 1 இல் காணலாம்.

**அட்டவணை** 1: புளூம் அறிவுசார்களமும் ஓனேஸ்கோ & நியுமென் சிந்தனைப் பகுப்பும்

| **ஒனோஸ்கோ நியுமென் சிந்தனைப் பகுப்பு** (1994) | **புளூம் அறிவு சார்களம்** (1983) | **செயற்பாங்கு வினைகள்** |
|---|---|---|
| | 1)அறிதல் (knowledge) | தேர்ந்தெடு, எண்ணு, மீண்டும் கூறு, அடையாளம் காண், பட்டியலிடு, சுட்டிக்காட்டு, பெயரிடு, வட்டமிடு, மறு உருவாக்கம் செய், விளக்கு, கவனி, மனனம் செய், குறிப்பிடு, வழிகாட்டலைப் பின்பற்று, இணை, வாசி, நினைவு கூர், கோடிடு, எழுது, ஒப்புவி, வரையறை கூறு. |
| தாழ்நிலைச் சிந்தனை (Lower Order Thinking | 2)புரிதல் (Comprehension) | தொடர்புபடுத்து, அளவிடு, மாற்று, வகைபடுத்து, விளக்கு, ஒப்பிடு, வேற்றுமை காண், நிறைவு செய், சொந்த நடையில் எழுது, மொழிப் பெயர்ப்பு செய், வேறு வடிவத்திற்கு மாற்று, பரிந்துரைத்திடு, எளிமையாக்கு, முறைப்படுத்து, தொகுத்திடு, சுருக்கு, காட்டு, வாசி, அடையாளம் காண், எடுத்துக்காட்டு தா, திரட்டு, தெளிவு படுத்து, கலந்துரையாடு, உய்த்துணர். |
| உயர்நிலைச் சிந்தனை | 3) ஆளல் (Application) | பயன்படுத்து, கணக்கிடு, விரிவாக்கு, வகைப்படுத்து, பொதுமைப்படுத்து, பொருள் பெயர்ப்பு செய், வடிவம் மாற்று, தேர்வு செய், படத்தால் விளக்கு, மாற்றி வடிவமைத்திடு, குறிவரைவாக்கு, நிறைவடையச் செய், பதிவுச் செய், நாடக வடிவமாக்கு. |

| | | |
|---|---|---|
| (Higher Order Thinking) | 4)பகுத்தல் (Analysis) | பகுத்திடு, சிறு கூறுகளாக்கு, வகைப்படுத்து, ஒற்றுமை காண், வேற்றுமை காண், உய்த்துணர், அடையாளங்காண், சுட்டிக்காட்டு, ஆய்ந்திடு, இனம் பிரித்திடு, உட்பிரிவுகளாக்கு, காரணத்தை ஆராய்ந்திடு. |
| | 5)தொகுத்தல் (Synthesis) | தொகுத்திடு, உருவாக்கு, திரட்டு, கருதுகோளை உருவாக்கு, முடிவுக்கு வரவும், வடிவமை, இணைத்திடு, முன்னுரைத்திடு, முறைப்படுத்து, முன்மொழிந்திடு, மீண்டும் எழுது, அனுமானித்திடு, மறு சீரமைத்திடு. |
| | 6)மதிப்பிடல் (Evaluation) | வாதிடு, மதிப்பிடு, தீர்மானி, முடிவு செய், நியாயப்படுத்து, உறுதிப்படுத்து, ஏற்புடைமையாக்கு, தரப்படுத்து, எடை போடு, தெரிவு செய், தேர்ந்தெடு, தற்காத்திடு, திறனை மதிப்பிடு. |

மூலம் : Bloom B.S. (1983)

## திருக்குறள் வழி சிந்தனைத் திறனை வளர்க்கும் வினா முறை

திருக்குறள் திருவள்ளுவர் இயற்றிய தமிழ் இலக்கியமாகும். இதில் 1330 குறள்கள் பத்துப் பத்தாக 133 அதிகாரங்களின் கீழ் தொகுக்கப் பெற்றுள்ளன. திருக்குறள் சங்க இலக்கிய வகைப்பாட்டில் பதினெண்கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் வரிசையில் "முப்பால்" என்னும் பெயரோடு விளங்குகின்றது. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பால்களும் கொண்டமையால் "முப்பால்" எனப் பெயர் பெற்றது. முப்பால்களாகிய இவை ஒவ்வொன்றும் "இயல்" என்னும் பகுதிகளாக மேலும் பகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் இயலும் சில குறிப்பிட்ட அதிகாரங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. ஒவ்வோர் அதிகாரமும் பத்து பாடல்களைத் தன்னுள் அடக்கியுள்ளது. இப்பாடல்கள் அனைத்துமே குறள் வெண்பா என்னும் வெண்பா வகையைச் சேர்ந்தவை. திருவள்ளுவர் ஒவ்வொரு அதிகாரத்தையும் மிகவும் நேர்த்தியாக பகுத்துள்ளார். அவற்றின் சாரத்தையும் பொருளையும் உயரிய சிந்தனை ஆற்றலைக் கொண்டு புரிந்து கொள்ள புளூமின் சிந்தனை வரையறையின் அடிப்படையிலான வினாக்களைத் தொடுக்கும் முறையைக் காண்போம்.

| **புளூம் அறிவு சார்களம்** (1983) | **சிந்தனையைத் தூண்டும் பயிற்சிகள் வழங்கும் முறை** |
|---|---|
| 1)அறிதல் *(knowledge)* | 1.கொடுக்கப்பட்ட குறள்களை மனனம் செய்.<br>2. மனனம் செய்த குறள்களை ஒப்புவி.<br>3. விளக்கத்திற்கு ஏற்ற குறளைத் தேர்ந்தெடு.<br>4. குறளுக்கு ஏற்ற விளக்கத்தை நினைவு கூர்ந்து எழுது. |
| 2)புரிதல் *(Comprehension)* | 1.கொடுக்கப்பட்ட சூழலுக்கு ஏற்ற குறளை அடையாளம் காண்.<br>2.அன்புடைமை அதிகாரத்தில் கொடுக்கபட்ட குறள்களின் பொருளை எளிய நடையில் எழுதுக.<br>3.புலால் உண்ணாமை, கொல்லாமை ஆகிய அதிகாரங்களின் கருத்துகளை ஒப்பிட்டுத் தொடர்புபடுத்து. |
| 3) ஆளல் *(Application)* | 1.மக்கட் பேறு அதிகாரத்திலுள்ள குறள்களின் சாரத்தை நாடக வடிவமாக்கு.<br>2.கேள்வி எனும் அதிகாரத்தில் உள்ள குறள்களின் பொருளைப் படத்தின் துணையுடன் விளக்கு.<br>3.விருந்தோம்பல் அதிகாரத்திலுள்ள குறள்களின் கருத்துகளைக் கொண்டு கதை ஒன்றை உருவாக்கு. |
| 4)பகுத்தல் *(Analysis)* | 1.கடவுள் வாழ்த்து அதிகாரத்திலுள்ள குறள்களைச் சிறு தலைப்புகளின் கீழ் பகுத்திடு.<br>2.திருவள்ளுவர் கொல்லாமை அதிகாரத்தை மனித குலத்திற்கு வலியுறுத்தும்<br>காரணத்தை ஆராய்க.<br>3.இறைமாட்சி அதிகாரத்தில் கொடுக்கப்பட்ட அரசனது பண்புநலன்களைக்<br>கொண்ட அரசாட்சியும் அப்பண்புகளைக் கொண்டிராத தலைவனது ஆட்சியும்<br>எப்படி இருக்கும் என்பதை இன்றைய உலக அரசியலோடு ஒப்பிட்டு ஒற்றுமை<br>வேற்றுமை காண்க. |
| 5)தொகுத்தல் *(Synthesis)* | 1.வான் சிறப்பு அதிகாரத்தில் உள்ள குறள்கள் இன்றைய நடைமுறை வாழ்க்கைக்கு எப்படிப் பொருந்தும் என்பதைத் தொகுத்து எழுது. |

| | |
|---|---|
| | 2.நட்பு, நட்பு ஆராய்தல், தீ நட்பு, கூடா நட்பு ஆகிய அதிகாரங்களிலுள்ள குறள்களை ஆராய்ந்து நட்புக்கு ஏற்ற முன்மாதிரியை உருவாக்கி முன்மொழிந்திடுக.<br>3.செய்ந்நன்றி அறிதல் அதிகாரத்திலுள்ள குறள்களைக் கருத்துக்கேற்ப வரிசைப்படுத்தி முறைபடுத்துக. |
| 6)மதிப்பிடல்<br>(*Evaluvate)* | 1.திருவள்ளுவரின் கருத்துகள் யாவும் எக்காலத்துக்கும் பொருந்துகின்றன என்பதைத் தேர்ந்தெடுத்த அதிகாரத்தின் துணையைக் கொண்டு ஏற்புடமையாக்கு.<br>2.மருந்து என்ற அதிகாரத்தில் உள்ள வள்ளுவரின் கருத்தை நியாயப்படுத்தி உறுதிபடுத்துக.<br>3.கல்வி கற்கும் மாணவன் ஒருவனுக்கு முக்கியமாகத் தேவைப்படுகின்ற பத்து அதிகாரங்களைத் தெரிவு செய்து அவற்றின் முக்கியத்துவத்தை வாதிடுக. |

திருக்குறளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் திருக்குறள்களை அதிகாரங்கள் வாரியாகக் கற்பிக்கும் போது ஒவ்வோர் அதிகாரத்திலும் காணப்படும் கருத்துகளை உயர்நிலைச் சிந்தனையைக் கொண்டு ஆராயும் திறனை மாணவர்களிடையே வளர்க்க முடியும். மேலும், திருக்குறளை ஆழமாகக் கற்றுத் தேரவும் இம்முறை வழிவகுக்கும். மாணவர்கள் திருக்குறளின் சாரத்தைப் படிப்படியாகச் சிந்தித்துக் தாழ்நிலைச் சிந்தனையிலிருந்து உயர்நிலைச் சிந்தனைக்கு உயர முடியும்.

## அறிதல்

அறிதல் நிலையில் மாணவனுக்குக் குறளைக் கற்பிக்கும் ஆசிரியர் அவன் கற்ற அல்லது நினைவில் பதித்துள்ள தகவல்களை அல்லது கருத்துகளை நினைவு கூறும் வகையிலான வினாக்களை எழுப்ப வேண்டும். இந்நிலையில் மாணவன் கற்ற குறளையும் பொருளையும் மனனம் செய்தல் போதுமானது.

## புரிதல்

புரிதல் அல்லது கருத்துணர்தல் நிலை என்பது ஒன்றன் பொருளைப் புரிந்து கொள்ளும் ஆற்றலைக் குறிப்பதாகும். இந்தப் படிநிலையில் மாணவர் தாம் கற்ற

குறளை வேறு சூழலில் பொருளுக்கு ஏற்ப பயன்படுத்தும் திறனைப் பெற்றிருப்பர். அதோடு விளக்கமளித்தல் தொகுத்துரைத்தல் போன்ற பொருள் பெயர்ப்பு நடவடிக்கைகளும் இவற்றில் அடங்கும். இந்நிலையில் ஏற்படும் கற்றல் விளைவுகள் நினைவுகூரும் நிலையிலிருந்து ஒரு படி மேலானாதாகும். இது கருத்தைப் புரிந்து கொள்ளும் மிகவும் தாழ்நிலைச் சிந்தனை நிலையாகும்.

## ஆளல்

ஆளல் அல்லது பயன்பாடு நிலை என்பது ஒருவர் ஐம்புலன்கள் வழி கற்றுள்ளவற்றைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் காணக்கூடிய புதிய சூழமைவில் பயன்படுத்தும் ஆற்றலைக் குறிப்பதாகும். அவ்வகையில் மாணவர் கற்ற குறள்களை நாடகமாகவோ கதையாகவோ படங்களாகவோ பொருள் பெயர்க்கும் போது, அவர்கள் எந்த அளவிற்குப் புரிந்து கொண்டுள்ளனர் என்பதை இந்நிலையில் அறிய முடியும். இஃது ஒரு கருத்தைப் புரிந்து கொள்ளும் செயற்பாங்கின் உயர்நிலையாகும்.

## பகுத்தல்

பகுத்தல் என்பது ஒரு பொருளையோ கருத்தையோ சிறு சிறு உட்கூறுகளாகப் பிரித்துப் பார்த்து அதன் தன்மையை அறியும் ஆற்றலைக் குறிப்பதாகும். அவ்வகையில் கற்ற குறள்களைச் சிறு தலைப்புகளின் கீழ் பகுத்தல், கருத்துக்கேற்ற காரணத்தை ஆராய்தல் மற்றும் ஓர் அதிகாரத்தோடு மற்றோர் அதிகாரத்தை ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமை காணுதல் போன்ற நடவடிக்கைகள் இந்தச் சிந்தனை நிலையைத் தூண்டும். ஒரு நிகழ்வு அல்லது சிக்கலுக்கான காரணங்களை நுணுகிப் பார்த்து அதனைப் பல்வேறு கோணங்களில் பகுத்து ஆராய்வதும் இந்தச் சிந்தனைப் படிநிலையில் அடங்கும்.

## தொகுத்தல்

தொகுத்தல் என்பது பல்வேறு சிறு கூறுகளை ஒன்றிணைத்து முழுமைப்பெற்ற புதிய ஒன்றினை உருவாக்கும் ஆற்றலைக் குறிக்கும்.இந்நிலையிலான கற்றல் விளைவுகள் ஒருவரது ஆக்கச் சிந்தனையால் அடையப்பெறுகின்றன. வான் சிறப்பு அதிகாரத்தில் உள்ள குறள்கள் இன்றைய நடைமுறை வாழ்க்கைக்கு

எப்படிப் பொருந்தும் என்பதைத் தொகுத்து எழுதுதல். நட்பு, நட்பு ஆராய்தல், தீ நட்பு, கூடா நட்பு ஆகிய அதிகாரங்களிலுள்ள குறள்களை ஆராய்ந்து நட்புக்கு ஏற்ற முன்மாதிரியை உருவாக்கி முன்மொழிந்திடுதல் போன்ற நடவடிக்கைகள் இந்தச் சிந்தனைப் படிநிலையை வளர்க்க உதவும். பகுத்தாய்ந்து பெற்ற கருத்துகளைக் கொண்டு சிந்தித்துப் புதியதொரு நிலைப்பாட்டை உருவாக்குவது இந்தச் சிந்தனை படிநிலையில் அடங்கும்.

## மதிப்பிடல்

மதிப்பிடல் என்பது குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒன்றின் முக்கியத்துவத்தை, தரத்தை, ஏற்புடைமையை அல்லது நம்பகத்தன்மையை நடுநிலையாகவும் ஏரணமாகவும் சிந்தித்து உறுதிபடுத்தும் ஆற்றலைக் குறிக்கும். அவ்வகையில் திருவள்ளுவரின் கருத்துகள் யாவும் எக்காலத்துக்கும் பொருந்துகின்றன என்பதைத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரத்தின் துணையைக் கொண்டு ஏற்புடமையாக்குதல் கல்வி கற்கும் மாணவன் ஒருவனுக்கு முக்கியமாகத் தேவைபடுன்கின்ற பத்து அதிகாரங்களைத் தெரிவு செய்து அவற்றின் முக்கியத்துவத்தை வாதிடுதல் போன்ற நடவடிக்கைகள் இந்தச் சிந்தனைப் படிநிலையை வளர்க்க உதவும். இச்சிந்தனை செயற்பாங்கு ஆய்வுச் சிந்தனையின் உயரிய நிலையினைப் புலப்படுத்துகிறது.

## முடிவுரை

இவ்வாறு குறள்களை வினாக்களின் வழி கற்பித்து மாணவர்களின் சிந்தனைத் திறனைத் தூண்டும் போது மாணவன் சிந்திக்கப் பயிற்சியளிக்கப்படுகின்றான். இம்மாணவன் பின்னாளில் தன்னுடைய அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களுக்குச் சிந்தித்துத் தீர்வுகாண்பவனாக விளங்குவான். ஆகவே, ஆசிரியரின் வினாக்கள் மாணவர்களின் சிந்தனைத் திறனைக், குறிப்பாக உயர்நிலைச் சிந்தனையைத் தூண்டுவனவாக அமைவது அவசியம். இவ்வாறு குறள்களைக் கற்கும் மாணவன் நிச்சயம் பின்னாளில் மற்ற குறள்களையும் தொடர்ந்து ஆர்வத்துடன் கற்பான். மேலும் பிறவகை இலக்கியக் கூறுகளைக் கற்கவும் இவ்வுத்தி முறை அவனுக்குப் பயனளிக்கும்.

## REFERENCES

Azizi, S. (2021). Sikap dan Kesediaan Pelajar Tingkatan Empat Terhadap Perlaksanaan Kemahiran Berfikir Aras Tinggi dalam Pembelajaran Matematik. Malaysian Journal of Social Sciences and Humanities (MJSSH) Volume 6, Issue 3. Universiti Kebangsaan Malaysia, Bangi.

Annathurai, K. (2016). Tirukkural Dalam Kurikulum Bahasa Tamil Sekolah Rendah Dan Menengah: Satu Kajian Persepsi Dan Amalan Ke Arah Pembentukan Insan Holistik.Tesis PhD Fakulti Sastera Dan sain Sosial, Universiti Malaya.

Bloom, B.S. (ed) (1983). Taxonomy of Educational Objectives Cognitive Domain New York David MC Key Co.

Brandt, L., & Brandt, P. A., (2005). Making sense of a blend: A cognitive-semiotic approach to metaphor. Annual Review of Cognitive Linguistics, 3(1), 216-249.

Che Zanariah, H.& Fadzilah, R. (2011) Pelaksanaan Pengajaran Dan Pembelajaran Kemahiran Menulis Di Sekolah Rendah Jurnal Pendidikan Bahasa Melayu Vol. 1, Universiti Kebangsaan Malaysia, Bangi.

Chomsky, N. (1972) Language and Mind New York. Haccourt Bracc.

Curriculum Development Division. (2003). KBSM Tamil language Syllabus (Sukatan Pelajaran Bahasa Tamil Kurikulum Bersepadu Sekolah Menengah). Ministry of Education Malaysia. Putrajaya.

Hadi, D. R. (2012). KBKK dan Aplikasi dalam P&P. Retrieved from Persatuan Pengamal Pendidikan Malaysia.

Ministry of Education Malaysia. (2014). Higher order thinking skills application in school (Kemahiran berfikir aras tinggi aplikasi di sekolah). Curriculum Development Division, Putrajaya.

Montag-Smit, T., & Maertz Jr, C. P., (2017). Searching outside the box in creative problem solving: The role of creative thinking skills and domain knowledge. Journal of Business Research, 81, 1-10.

Narayanasamy, K. (2012). Sinthikka Karpittalum Sinthanaiyai Karpittalum: Kuala Lumpur Raden Creative.

Rajendran, N. (2008). *Asiriyam Malaysiyavil Tamil Kalviyum Karral Karpittalum.* Kuala Lumpur Uma Publicaton:

Selvajothi, R. (2009). Penggunaan Bahasa Kiasan dalam Karya *Thirukkural*: Satu Analisis. (Disertasi Sarjana Bahasa Moden) Fakulti Bahasa dan Linguistik: Universiti Malaya.

Supramani, S. (1994). *Sintanai Thiranai Valarppathil Vinaakkalin Payanpaadu*. 2nd International Tamil teachers Conference. Kuala Lumpur.

Upiq Asmar Zainal Abidin dan Ragu Ramasamy. (2015). Persepsi Guru Terhadap Kemahiran Berfikir Aras Tinggi Dalam Pengajaran Dan 145 Pembelajaran Di Sebuah Sekolah.

International ASEAN Comparative Education Research Network Conference. Kajang. Malaysia.

Zoya, G. Khanova. (2021). Distance learning of psychology students in the context of a pandemic: an analysis of the experience gained. SHS Web of Conferences 103, International Scientific and Practical Conference.